**கவனிக்க.-** (i) இவ்வர்த்தமானியின் பகுதி VI இல் *2020* ஆம் ஆண்டுக்கான கேகாலை மாவட்ட நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.
(ii) *2020.02.28* ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி VI (அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2166 - 2020 මාර්තු මස 06 වැනි සිකුරාදා - 2020.03.06

*2166 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பதவிகள் - வெற்றிடம் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 874 |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - | ஆதன விற்பனைகள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| துணைவிதிகள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2020, மாச்சு மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2020, மாச்சு மாதம் 13 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு - மேல் மாகாணம்**

**மேல் மாகாண அரசாங்க சேவையில் உள்ளூராட்சித் திணைக்களத்தில் விசாரணை அலுவலர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான (திறந்த) போட்டிப் பரீட்சை - 2020**

*மேல் மாகாண அரசாங்க சேவையில் உள்ளூராட்சித் திணைக்களத்தில் விசாரணை அலுவலர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான (திறந்த) போட்டிப்பரீட்சைக்காக விண்ணப்பம் கோரும் தினத்திற்கு மேல் மாகாணத்தில் 03 வருடங்களாக நிரந்தரமாக வசிக்கும் கீழ்க்குறிப்பிடப்பட்ட தகுதிகளையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

**1. கல்வித் தகைமைகள்**

*பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் வணிக முகாமைத்துவம், அரசாங்க நிர்வாகம், நிதி முகாமைத்துவம் அல்லது வணிகவியல் தொடர்பான பட்டம் அல்லது கணக்கீடு மற்றும் கணக்காய்வு பாடங்களுடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் பெற்றுக்கொண்ட பட்டம் அல்லது இலங்கை தொழில்நுட்ப கல்லூரி/இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்லூரியினால் வழங்கப்படும் உயர் தேசிய கணக்கீடு தொடர்பான டிப்ளோமா/உயர் தேசிய வணிக டிப்ளோமா சான்றிதழொன்றினைப் பெற்றிருத்தல்.*

**2. தொழிற் தகைமைகள்** - *ஏற்புடையதல்ல*

**3. அனுபவம்** - *ஏற்புடையதல்ல*

**4. உடற் தகுதிகள்**

*மேல் மாகாணத்தினுள் எப்பிரதேசத்திலாயினும் சேவையாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உளத் தகுதியுடன் இருத்தல் அவசியம்.*

**5. சம்பளம்**

*இப்பதவிக்குரிய சம்பளக்குறியீட்டு இலக்கம் MN 4 - 2016*
*சம்பள அளவு ரூபா 31,490 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 5 x 750 - ரூபா 54, 250.00 (அ.நி.சு.நி. 03/2016 இற்கேற்ப)*

**6. சேவை நிபந்தனைகள்**

*இந்நியமனம் நிரந்தரமானது. ஓய்வூதியக் கொடுப்பனவுடையது. உமக்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு நீர் கீழ்ப்படிதல் வேண்டும். மேல் மாகாண அரசாங்க சேவையில் உள்ளூராட்சித் திணைக்களத்தில் விசாரணை அலுவலர் பதவிக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்த்தல் ஒழுங்கு விதிகளுக்கமைவாக சேவை நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும்.*

**7. ஆட்சேர்ப்பு முறை**

*எழுத்துப்பரீட்சையில் பெறும் புள்ளிகளின் தகைமை வரிசைப்படி பொதுவான நேர்முகத்தேர்வுக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் நிலவுகின்ற வெற்றிடங்களில் திறந்த அடிப்படையில் 100% ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.*

**8. பரீட்சை தொடர்பான விபரம்**

*எழுத்துப்பரீட்சையானது கீழுள்ளவாறு 02 வினாத்தாள்களைக் கொண்டது:*

| வினாத்தாள் | காலம் | புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. பொது அறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| 2. நுண்ணறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40% |

**பரீட்சைக்குரிய பாடத்திட்டம்**

| வினாத்தாள் | பாடத்திட்டம் |
|---|---|
| 1. பொது அறிவு | இவ்வினாப்பத்திரம் பொருளாதார, சமூக, கல்வி, விஞ்ஞான, கலாச்சார, அரசியல் மற்றும் விளையாட்டுத்துறைகளில் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் மிக்க நிகழ்கால நடப்பு விடயங்கள் தொடர்பான விண்ணப்பதாரியின் அறிவினை பரீட்சிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட வினாக்களைக் கொண்டதாகும். |
| 2. நுண்ணறிவு | விண்ணப்பதாரியின் மொழியாற்றல், தர்க்கிக்கும் ஆற்றல் மற்றும் கணிதத்திறமை ஆகியவற்றை பரீட்சிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டதாகும். |

**9. பொதுவான தகுதிகள்**

I. விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல்.
II. விண்ணப்பதாரி சிறந்த நடத்தையுடையவராயிருத்தல்.
III. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினமான 2020.04.06 ஆம் தேதியில் ஆகக்குறைந்தது 03 வருடங்களாவது மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிப்பவராயிருத்தல்.
IV. இப்பதவிக்கு இணைத்துக் கொள்வதற்கு அவசியமான இவ்வறிவித்தலில் குறிப்பிட்டுள்ள அனைத்து தகுதிகளையும் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் அவசியம்.
V. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் தினத்தில் வயது 21 வருடங்களுக்குக் குறையாமலும் 35 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல். (தற்போது மேல் மாகாண அரசாங்க சேவையிலுள்ள நியமனம் நிரந்தரமாக்கப்பட்ட அலுவலர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல)
VI. மேல் மாகாணத்தினுள் எப்பிரதேசத்திலாயினும் சேவையாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உளத் தகுதியுடன் இருத்தல் அவசியம்.

**10. பரீட்சைக் கட்டணம்**

எல்லாப் பரீட்சார்த்திகளும் மேல் மாகாண சபைக்கு பரீட்சைக் கட்டணமொன்றைச் செலுத்த வேண்டும். இப்பரீட்சைக்கான கட்டணம் ரூபா. 600 ஆகும். அக்கட்டணத்தினை, மேல் மாகாண சபை வருமானத் தலைப்பு 20-03-02-99 இற்கு வரவு வைத்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்தினத்தில் அல்லது அதற்கு முன்னர் மேல் மாகாணத்தில் அமைந்துள்ள ஏதேனுமொரு பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பணமாகச் செலுத்தி உமது பெயரில் பெறப்பட்ட பற்றுச் சீட்டினை விண்ணப்பத்தில் அதற்குரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டியிருத்தல் வேண்டும். அதன் நிழற்படப் பிரதியொன்றை தம்முடன் வைத்திருத்தல் பயனுடையதாகும். இப்பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட கட்டணம் எக்காரணத்திற்காகவும் முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ மீளளிக்கப்படமாட்டாது. பரீட்சைக் கட்டணமாக முத்திரைகளோ காசுக் கட்டளைகளோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**11. விண்ணப்பிக்கும் முறை**

I. விண்ணப்பம் இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு ஏற்ப A4 அளவிலான ஒரு தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரித்து பரீட்சார்த்தி தமதுகையெழுத்தினால் பூர்த்தி செய்தல் வேண்டும். இலக்கம் 01 தொடக்கம் 05 வரை முதல் பக்கத்திலும் இலக்கம் 06 தொடக்கம் உள்ள பகுதிகள் ஏனைய பக்கங்களிலும் அமையுமாறு விண்ணப்பத்தினைத் தயாரித்தல் வேண்டும். உரிய மாதிரிப் படிவத்துடன் பொருந்தாத, உரிய திகதிக்கு முன் பரீட்சைக்கட்டணம் செலுத்தப்படாத மற்றும் சரியாகப் பூர்த்தி செய்யப்படாத பூர்த்தியற்ற நிலையிலுள்ள விண்ணப்பங்கள் அறிவித்தல்கள் ஏதுமின்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்யாமையினால் ஏற்படும் இழப்பை இவ்விண்ணப்பதாரி ஏற்றுக்கொள்ளல் அவசியம். விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியொன்றை வைத்திருத்தல் பயனுடையதாகும்.

II. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 2020.04.06 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு "செயலாளர், மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு, இலக்கம் 628, 10 ஆவது மாடி, ஜனஜய சிட்டி கட்டிடம், நாவல வீதி, இராஜகிரிய" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மேல் மாகாண அரசாங்க சேவையில் விசாரணை அலுவலர் தரம் III பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான (திறந்த) போட்டிப் பரீட்சை" என தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்தினத்தின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.

III. விண்ணப்பம் கிடைத்ததாக அறிவிக்கப்படாது. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன் அதைத் தெரியப்படுத்தும் அறிவித்தலொன்று மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.psc.wp.gov.lk எனும் இணையத்தளத்தில் வெளியிடப்படும். அவ்வறிவித்தல் வெளியிடப்பட்டு 07 நாட்கள் கழிந்த பின்னும் அனுமதி அட்டை கிடைக்கவில்லையாயின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதுபற்றி மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழு அலுவலகத்திற்கு தெரியப்படுத்தல் வேண்டும். உம்மிடமுள்ள விண்ணப்பப்பத்திரம் மற்றும் பணம் செலுத்திய பற்றுச் சீட்டின் நிழற்பிரதி, விண்ணப்பப்பத்திரத்தினை பதிவுத் தபாலில் அனுப்பியதற்கான பற்றுச் சீட்டுடன் உங்களது முழுப் பெயர், முகவரி, தேசிய ஆள் அடையாள அட்டை எண் ஆகியவற்றுடன் பரீட்சையின் பெயரினை சரியாகக் குறிப்பிட்டு மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழு அலுவலகத்தில் விசாரித்தலவசியம்.

***12. பரீட்சைக்கு தோற்றுதல்***

(அ) சரியான முறையில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். விண்ணப்பதாரர்கள் தமக்குரிய பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். மேலும் அவ்வாறு பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளிலேயே தமது கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்திய அனுமதி அட்டைகளை பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும். தமது அனுமதி அட்டைகளை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்படாது.

(ஆ) பரீட்சை நடாத்துவது தொடர்பாக மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு விண்ணப்பதாரிகள் உட்படுவர். அச்சட்ட திட்டங்களை மீறினால் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் வழங்கப்படும் எந்தவொரு தண்டனைக்கும் உட்பட நேரிடும்.

***13. விண்ணப்பதாரியின் ஆளடையாளம்***

தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரி திருப்தியடையும் விதத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் தமது ஆளடையாளத்தை ஊறுதிப்படுத்துவதற்காக கீழ் வருவனவற்றிலொன்றை சமர்ப்பிக்கலாம்.

I. ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை
II. குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

***14. தவறான தகவல்களை சமர்ப்பித்தல்***

விண்ணப்பதாரியொருவருக்கு உரிய தகைமைகள் இல்லையென தெரியவரின், பரீட்சைக்கு முன்பு அல்லது பரீட்சையின் போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரியொருவர் தெரிந்துகொண்டே தவறான தகவல்களை வழங்கியது அல்லது ஏதாவதொரு முக்கிய தகவலை மறைத்தது தெரியவரின் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்பட இடமுண்டு. இது தொடர்பாக மேல் மாகாண அரசாங்க சேவை செயற்படிமுறை ஒழுங்கு விதிக்கோவையின் 47 ஆவது பிரிவின் படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

***15. பரீட்சை முறை***

I. விண்ணப்பதாரியொருவர் தோற்றுகின்ற அனைத்துப் பாடங்களுக்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும்.
II. இப்பரீட்சையானது மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் அறிவிக்கப்படும் எதிர்வரும் ஒரு நாளில் நடாத்தப்படும்.

***16.*** இப்பரீட்சையில் தகுதி பெற்ற விண்ணப்பதாரிகளின் பெயர்களை உள்ளடக்கிய பெறுபேறுகள் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் www.psc.wp.gov.lk எனும் இணையத்தில் வெளியிடப்படும்.

***17.*** அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளதாக குறிப்பிட்டு, இவ்வறிவித்தலுக்கு ஏற்றவாறு தயாரிக்கப்பட்டு, பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு குறித்த திகதியில் அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் அவர்கள் உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளனர் எனும் கருதுகோளின் அடிப்படையில் பரீட்சைக்குத் தோற்ற மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் இடமளிக்கப்படும். எல்லா வகையிலும் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தபாலில் விண்ணப்பம் தொலைதல் அல்லது காலதாமதமாதல் தொடர்பாக மெற்கொள்ளப்படும் எந்தவொரு முறைப்பாடும் கருத்திற்கொள்ளப்படாது. விண்ணப்பதாரியொருவருக்கு

பரீட்சைக்கான அனுமதி அட்டையொன்றை வழங்குதல் அவர் இப்பதவிக்கான தகுதிகளைப் பூர்த்திசெய்துள்ளதாக ஏற்றுக்கொண்டதாக கருதப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வொன்றிற்கு அழைக்கப்பட்டு விளம்பரத்திற்கேற்ப உரிய தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என பரீட்சிக்கும் வேளையில் உரிய தகைமைகள் பூர்த்தி செய்யப்படவில்லை எனத் தெரியவரின் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

**18.** இவ்வறிவித்தல் மற்றும் மாதிரி விண்ணப்பம் ஆனது மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவின் www.psc.wp.gov.lk எனும் இணையத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

**19.** இவ் விண்ணப்பங்கோரும் அறிவித்தலில் உள்ளடக்கப்பட்ட/உள்ளடக்கப்படாத விடயங்கள் தொடர்பாக மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**20.** இவ்வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையில் முரண்பாடுகள் ஏற்படின் சிங்கள மொழி வலுப்பெறுவதாக இருக்கும்.

திலக் செனரத்,
செயலாளர்.

மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு,
மேல் மாகாணம்,
2020, சனவரி

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மேல் மாகாண அரசாங்க சேவையில் உள்ளூராட்சித் திணைக்களத்தில் விசாரணை அலுவலர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான (திறந்த) போட்டிப் பரீட்சை - 2020**

சுட்டெண் [ ]

(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் (பொருத்தமான எழுத்தினை கூட்டில் எழுதவும்)

சிங்களம் - S
தமிழ் - T [ ]
ஆங்கிலம் - E

01. 1.1 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்): ....................................................................

........................................................................................................................................

(Ex : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 முதலெழுத்துக்களுடன் கடைசிப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்): ....................................................

........................................................................................................................................

(Ex : GUNAWARDHANA H. M. S. K)

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்): ........................................................................................

1.4 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்:

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

02. 2.1 பிரதேச செயலாளர் அலுவலகம்: ..........

2.2 மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிக்கும் காலம்: ..........

03. 3.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்): ..........

நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்): ..........

3.2 அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி :

i சிங்களத்தில்/தமிழில்: ..........
ii ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்: ..........

3.3 தொலைபேசி இலக்கம் -

நிலையான:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

கைப்பேசி:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

* பரீட்சை தொடர்பான அனைத்து தகவல்களும் நேர்குறிப்பிடப்பட்ட கைப்பேசி இலக்கத்திற்கு SMS ஊடாக அனுப்பப்படுவதால் செல்லுபடியான தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிடவும்.

04. பால் - (பொருத்தமான கூட்டில் " √ " குறியினை இடவும்)

ஆண் ☐ பெண் ☐

05. 5.1 விவாக நிலை - (பொருத்தமான கூட்டில் "√" குறியினை இடவும்)

விவாகமானவர் ☐ விவாகமாகாதவர் ☐

5.2 பிறந்த திகதி : ஆண்டு: ☐ மாதம்: ☐ திகதி : ☐

5.3 விண்ணப்ப முடிவுத் திகதியில் வயது : வருடங்கள்: ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள்: ☐☐

06. பட்டப்படிப்பு பற்றிய தகவல்கள் :

i. பெற்றுள்ள பட்டம்: ..........
ii. பட்டப்படிப்பில் பயின்ற பாடங்கள்: ..........
iii. பல்கலைக்கழகம்: ..........
iv. பட்டச்சான்றிதழின் நடைமுறைத் திகதி: ..........

07. 7.1 தற்போது அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையில் உள்ளவராயின், தற்போது வகிக்கும் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டவரா? ஆம்/இல்லை: ..........

7.2 ஆம் எனில் தற்போது வகிக்கும் பதவி: ..........
7.3 சேவையாற்றும் தாபனம்: ..........
7.4 அப்பதவியில் நியமிக்கப்பட்ட திகதி: ..........
7.5 சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி: ..........

08. பணம் செலுத்தப்பட்ட பிரதேச செயலாளர் அலுவலகம்: ........................................................................

பற்றுச்சீட்டு இலக்கம்: ...................................................................

திகதி: ........................

**பற்றுச்சீட்டினை இங்கே கழன்றுவிடாதவாறு ஒட்டவும்**

09. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

.....................................................................ஆகிய என்னால் இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு ஏற்ப உண்மையானவையெனவும் சரியானவையெனவும் உறுதிப்படுத்துகிறேன். என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என கண்டுபிடிக்கப்பட்டால் மேல் மாகாண அரசாங்க சேவையில் உள்ளூராட்சித் திணைக்களத்தில் விசாரணை அலுவலர் தரம் III ஆம் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு எனக்குள் உரிமையினைப் புறக்கணிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இயலும் என்பதை நான் நன்கறிவேன்.

கையொப்பம்: .................................

திகதி: .....................

10. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்**

இவ்விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி ............................................... என்பவரை எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரியும் எனவும், அவர் உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தியுள்ளார் எனவும், அதன் பற்றுச் சீட்டினை விண்ணபத்தில் ஒட்டியுள்ளார் எனவும் அவர் ...........................ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

.....................................................
கையொப்பத்தினை உறுதிப்படுத்துபவரின்
கையொப்பமும் பதவி முத்திரையும்.

திகதி: .................................

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர் : ...................................................

பதவி :.....................................................

விலாசம் :.............................................

கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்

(விண்ணப்பத்திலும் அனுமதி அட்டையிலும் விண்ணப்பத்தாரியின் கையொப்பம் அதிகாரம் பெற்ற அலுவலர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரசாங்க சேவையில் உள்ளவராயின் நிறுவனத்தலைவர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினாலும் ஏனைய விண்ணப்பதாரிகளின் கையொப்பமானது அரச பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரி அதிகாரமுள்ள அலுவலர், பொலிஸ் சேவையில் வர்த்தமானிப்படுத்தப்பட்ட பதவியொன்றை வகிக்கும் அலுவலர் (ரூபா. 498,960.00 இற்கு மேலான வருடாந்த சம்பளம் பெறும் அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி நிலை அலுவலர், பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதி, கருதத்தக்க அளவிலான நிலையிலிருக்கும் ஒரு மதகுரு ஆகியோரில் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.)

*11.* **அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்களுக்கு நிறுவனத் தலைவரின் அத்தாட்சி**

இவ்விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி........................................................ தற்போது இவ்வமைச்சில்/ இத்திணைக்களத்தில் (நிரந்தர பதவி) ....................................................... கடமையாற்றுகிறார் எனவும் இப் பதவிக்காகத் தெரிவு செய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியும்/முடியாது எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

.....................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

திகதி: .................................

பதவி: .....................................................

அமைச்சு/திணைக்களம்: .............................................

*03 - 447*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.